**தலைப்பு 232 - சிறைச்சாலைகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2021 மே 10 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 06 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கப்பட வேண்டியதாக இருந்த போதிலும், அந்த தேவைப்பாடுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றின் ஏசீஏ – 02 குறிப்பில், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் செலவின பொழிப்பின் மொத்த | ஏசீஏ – 02 குறிப்பின் விரிவாக்கமாக ஏ.சீ.ஏ.(2)(ii) குறிப்பினை அவதானிக்கும் போது இந்த நிலமையை தெளிவுபடுத்திக்கொள்ள முடியும் என கணக்காய்விற்கு சுட்டிக்காண்பிக்கின்றேன். | ஏற்பாடுகளுக்கமைய ஏ.சீ.ஏ.(2)(i) குறிப்பின் பிரகாரம் செலவினக்கூற்று மொத்த செலவினத்திற்கு சமனாகும் வகையில் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீண்டெழும் மற்றும் மூலதனத் தன்மையிலான செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 7,059,436,265 ஆன போதிலும், நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் செலவினக்கூற்றின் (ஏ.சீ.ஏ.(2)(i)) மொத்த மீணிடெழும் மற்றும் மூலதனச் செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 7,029,710,753 ஆனமையால் ரூபா 29,725,512 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 179,311,886 ஆன நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் வாரியபொல மற்றும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைகளுக்கு சொந்தமான பெறுமதி இனங்காணப்படாத நிலையான சொத்துக்கள், நிதியல்லாத கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020ஆம் ஆண்டின் கொள்வனவுகள் மற்றும் கைத்தவிர்ப்புகள் நிதியல்லாத சொத்துக்களின் கூற்றில் சீராக்கம் செய்ய இயலாதிருந்ததுடன், 2021ஆம் ஆண்டு முதல் ஒதுக்கீட்டு கணக்கினூடாக நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உரிய முறையில் கொள்வனவுகள் மற்றம் கைத்தவிர்ப்புகள் சீராக்கம் செய்யப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கின்றேன். | ஏற்பாடுகளுக்கமைய நிதியல்லாத சொத்துக்கள் கூற்று உரிய முறையில் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கைத்தொழில் மற்றும் விவசாய முற்பணக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 47,325,414 ஆன நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் ரூபா | கடன் கொடுத்தோர் மற்றும் அட்டுறு செலவினத்திற்கான பெறுமதிகள் உருவாகியுள்ள விதம் இறுதிக் கணக்கின் பட்டோலை இலக்கம் 03 இல் | தேவையான அனைத்து சான்றுகளையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 197,540 ஆன நடைமுறைப் பொறுப்புகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்டுள்ளதுடன், கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களை இதனுடன் ஒப்படைக்கின்றேன். கடன்பட்டோர் பட்டோலைகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | |

**1.6.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுகளின் பிரகாரம், ரூபா 218,991,989 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் ரூபா 468,863,169 ஆனமையால் ரூபா 249,817,180 ஆன வேறுபாடொன்று நிலவியது. | கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளும் பல்வேறு பிரிவுகள் நிறுவனமொன்றில் காணப்படுகின்ற போதிலும், அவர்கள் அனைவருக்கு சிகாஸ் கட்டமைப்பினுள் பிரவேசித்து பொறுப்புகள் தொடர்பான தகவல்களை உட்புகுத்துவதில் உள்ள நடைமுறைப் பிரச்சினைகள் அந்த மீதிகளுக்கிடையிலான வேறுபாட்டிற்கு காரணமாக அமைந்துள்ளன. | நிதிக்கூற்றுக்களின் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் திறைசேரியின் குறிப்புகளிலுள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளுடன் இணங்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அவன் கார்ட் மேன் பவர் ரெக்குரிட்டிங் தனியார் கம்பனியுடன் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டத்திற்காக சிறைக்கைதிகளின் ஊழியத்தினை வழங்குவதற்காக | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 128(1)(ஆ) பிரகாரம் செயற்பட வேண்டியமை. அரச வருமானத்திற்க செலவு வைக்கப்பட வேண்டிய தொகையினை உரிய முறையில் இனங்கண்டு |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் 02 மாதங்களுக்காக பெற வேண்டிய ரூபா 3,707,000 தொகை 2021 ஏப்ரல் 01ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே, 2021 யூன் மாதத்திற்காக கிடைத்த ரூபா 655,000 தொகையில் 10 சதவீதம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | | அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 12 மீண்டெழும் செலவின விடயங்களின் சேமிப்புகள் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | 12 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 997,425,000 ஆன மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில் செலவின விடங்களின் சேமிப்புகள் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். அந்த நிலைமைக்கு பிரதானமாக தாக்கமளித்துள்ள காரணிகளில் போதியளவான கட்டுநிதி கிடைக்காமை, கொவிட் வைரஸ் நிலமை காரணமாக நிதியேற்பாடுகளை செலவிட முடியாதிருந்தமை மற்றும் பிரயாணக் கட்டுப்பாடுகள் காரணமாக மீண்டெழும் செலவின விடயங்களின் நிதியேற்பாடுகள் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) 10 மூலதன செலவின விடயங்களின் சேமிப்புகள் 18 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | அந்த நிலைமைக்கு பிரதானமாக தாக்கமளித்துள்ள காரணிகளில் போதியளவான கட்டுநிதி கிடைக்காமை, கொவிட் வைரஸ் நிலமை காரணமாக திட்டமிட்டவாறு நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவு செய்ய முடியாதிருந்தமை போன்றே, சில செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாட்டின் நிலமைகளை கட்டுப்படுத்த முடியாதிருந்தமை போன்றன ஆகும். அதன் காரணமாக இந்த செலவின விடயங்களின் நிதியேற்பாடுகளை எதிர்பார்த்த முறையில் பயன்படுத்த முடியாதிருந்தது. | - மேற்படி - |

**2.3 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான 05 வருடங்களை கடந்த ரூபா 7,424,112 தொகையான நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | பல வருடங்களாக முற்பண பீ கணக்கிற்குரிய நிலுவைக் கடன் மீதிகள் காணப்பட்டன. ஓய்வுதியம் பெற்ற உத்தியோகத்தர்களின் கடன்களை ஓய்வுதிய பணிக்கொடையூடாக அறவிடப்படுவதுடன் சில உத்தியோகத்தர்கள் மரணமடைந்தும் வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளமையால் கடன் வகைகளை அறவிடும் போது சிக்கல்கள் உருவாகும். 01/2020 ஆம் இலக்க மற்றும் 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் | நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 3ஆம் பந்தியின் அறிவுரைக்கமைய ரூபா 25,000 இற்கும் குறைவான கடன் மீதிகளை பதிவழிப்பதற்காக ரூபா 242,220 ஆன தொகை 2020 நவம்பர் 28ஆந் திகதி சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | தாபனவிதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 1.6, 1.7 மற்றும் 6.3ஆம் பிரிவுகள் மற்றும் 2004 ஒக்தோபர் 11ஆந் திகதிய 118ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்திக்கு முரணாக செயற்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அரச அமைச்சுக்கள்/ திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற 40 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகள் ரூபா 437,913 ஆகும். | இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 91,209 ஆன மீதியில் பெரும்பாலான மீதிகள் 2000ஆம் ஆண்டுக்கு முன்னைய மீதிகளாக காணப்பட்டமையால், அந்த இடமாற்றங்கள் குறித்த தகவல்களை பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட சிரமம் காரணமாக அவற்றை அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. 1 முதல் 2 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 232,136 ஆன கடன் மீதி தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன், 3 மாதங்கள் முதல் 12 மாதங்களுக்கு இடைப்பட்ட ரூபா 114,568 ஆன கடன் மீதியை தீர்ப்பனவு செய்யுமாறு உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2017 திசெம்பர் 29ஆந் திகதிய மற்றும் 262/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 4 மற்றும் 6ஆம் பந்திகளுக்கு முரணாக செயற்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக திணைக்கள | 5 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகளின் பெரும்பாலான தகவல்களை தேடிக் கண்டறிய முடியாதுள்ளது. இந்த கடன் மீதிகளிடையே ரூபா 25,000 இற்கு குறைவான கடன் மீதிகளை பதிவளிப்பதற்கு இராஜாங்க அமைச்சிற்கு | அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ‘பீ’ கணக்கில் ஓய்வூதியம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியாக ரூபா 1,783,542 காண்பிக்கப்பட்டிருந்தது. | அனுப்பப்பட்டுள்ளது. 1 முதல் 4 வருடங்களுக்கு இடைப்பட்ட ஓய்வூதிய கோவைகள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒழுக்காற்று விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடையாத உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவிட முடியாதுள்ளது. | |
| (ஈ) | 06 உத்தியோகத்தர்களின் இனங்காணப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 415,546 ஆகும். | ரூபா 401,152 ஆன கடன் மீதிகளை இனங்காணல் சிரமமாக உள்ளதுடன், அவ்வப்போது இடமாற்றம் செய்யும் போது ரூபா 14,393 ஆன மீதியொன்று புத்தகங்களில் உள்ளடக்கப்படாமையால் இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் மீதிகளுக்கிடையே வேறுபாடொன்று நிலவியது. | இனங்காணப்படாத கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.4 வைப்புக்கள்**

---

நிதிக்கூற்றுகளுக்குரிய வைப்பு கொடுப்பனவு மற்றும் மீதிகளை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 வைப்புக் கணக்குகளின் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 1,008,120 ஆன வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாரலை அதிகாரகளுக்கு அறிவுரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கணக்காய்விற்கு தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிறைக்கைதிகளின் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 4,554,557 ஆன மீதியொன்று வைப்புக் கணக்கில் காணப்பட்டதுடன், அவற்றுள் 02 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 1,394,779 ஆகும். | கணக்காய்வு அவதானிப்புகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள சிறைக் கைதிகளின் வேதனங்கள் கணக்கில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் ரூபா 1,394,779 ஆன மீதி தொடர்பில் 22/2011 ஆம் இலக்க திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம், ஒரு வருடத்திற்கு குறையாத காலப்பகுதியில் உரித்து கோரப்படாத சிறைக்கைதிகளின் வேதனங்கள் சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 2.5 கட்டுநிதி மீதி

கட்டுநிதி மீதியை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான தீர்ப்பனவு செய்யப்படாத உப கட்டுநிதி மீதி ரூபா 54,000 ஆகும். | 2021 ஏப்ரல் மாதம் கணக்குப் பொழிப்பினூடாக தீர்ப்பனவு செய்வதற்க நடவடிக்கை எடுக்கப்படும் என கணக்காய்விற்கு தெரிவித்துக்கொள்கின்றேன். | தீர்ப்பனவு செய்யப்படாத உப கட்டுநிதி தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.6 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 115 இற்கு முரணாக 2,373 சந்தர்ப்பங்களில் ரூபா 629,797,555 ஆன | நிதிப்பிரமாணம் 115 இன் பிரகாரம், ஆண்டினுள் முன்வைக்கப்படும் உரித்துக் | நிதிப் பிரமாணங் களுக்கமைய செயற்பட வேண்டியமை. |

| | |
|---|---|
| பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | கோரல்கள் இயலுமாளவரை அந்த வருடத்தினுள் தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் ஆகக் கூடியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறே கடந்த காலப்பகுதியில் நாட்டில் நிலவிய அவசர நிலைமை காரணமாக தேவையான அளவில் கட்டுப்பணம் கிடைக்காமை இவ்வாறு சேர்வதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கமளித்துள்ளது என்பதை கணக்காய்விற்கு சுட்டிக் காண்பிக்கின்றேன். |

## 2.7 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்தல் செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வது தொடர்பாக செயற்திறனான நடைமுறையொன்று உள்ளதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும். அறிக்கையின் 4.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களின் பிரகாரம் அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவக்கப்பட்டிருக்க வில்லை | தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 502(ஆ)(i) | 20 ஆண்டுகளை விட பழைய அரச துறையிலிருந்தும் தனியார் துறையிலிருந்தும் விற்பனைக்காக முறையே பெறவேண்டிய ரூபா 1,481,622.18 தொகை மற்றும் ரூபா 17,461 இற்கு தொகைககள் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | நிலுவை கடனை அறவிடுவதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கணக்காய்விற்கு தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் 2015 முன்னரான அரச துறையிலும் தனியார் துறையிலும் கிடைக்க வேண்டிய நிலுவை பட்டியல் தொடர்பாக பதிவேடுகள் இல்லாமை மற்றும் பழைய பட்டியல்கள் காணாமல் போனமை போன்ற காரணங்களின் பேரில் தீர்வு செய்வது தாமதமாவதற்கு காரணங்களாக இநருந்தன. | நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2.6 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கொரோனா தொற்று நிலைலமையின் பேரில் அறிக்கைகளை சமர்ப்பிக்க முடியாதிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவை** | | |
| (அ) 4(2) வழிகாடடலின் பிரகாரம் ஆகக் குறைந்தது 3 ஆண்டு காலத்திற்காக பாதுகாப்பு பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தி அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவை 2006 4(2) பிரிவின் பிரகாரம் 03 ஆண்டு காலப்பகுதிக்காக எதிர்பாரத்த பெறுகை திட்டத்தை தயாரிப்பதற்காக குறித்துக் கொண்டதாக கணக்காய்விற்கு அறிய தருகின்றேன் | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2.7.7 வழிகாட்டலின் பிரகாரம் பிராந்திய பெறுகைகள் மேற்கொள்ளாமல் மஹர சிறைச்சாலையின் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ரூபா 2,635,639 பெறுமதியான எழுதுகருவிகள் கேள்வி நடைமுறைக்கு புறம்பாக அவசர கொள்வனவு செயற்பாடாக கருதப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் மஹர சிறைச்சாலையில் மேற் கொள்ளப்பட்ட பரிசோதனைக்குரிய கணக்காய்வு விசாரணைக்காக தெளிவுபடுத்துவதற்காக மஹர சிறைச்சாலை யிடமிருந்து பதில் கோரப்பட்டுள்ளதுடன் அதற்காக விரிவான பதிலொன்று அதனுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் எதிர் காலத்தில் இவ்வாறான நிலைமையொன்று ஏற்படாத வகையில் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்க இணங்க செயற்படுமாறு குறித்த சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஆலோசணை வழஙகப்பட்டுள்ளதாகவும் கணக்காய்விற்கு அறிய தருகின்றேன் | - மேற்படி – |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.2.1 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 சிறைச்சாலைகள் மற்றும் திறந்த வேலை முகாம்களில் காணப்படும் 05 பேரூந்துகள், 03 கார் வண்டிகள், டிராக்டரொன்று. 04 தீயணைக்கும் உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு கெமறாக்கள் முறையின் 64 கமறாக்கள் செயலற்று காணப்பட்டன | • சிறைச்சாலைகள் திணைக்களத்திடமுள் ள பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வாகனங்களை கை தவிர்ப்பதற்காக தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகளை எடுத்தல் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படு வதாகவும்.<br><br>• கணக்காய்வினால் அறிவிக்கப்பட்ட பிரகாரம் 04தீயணைக்கும் உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமையால் அது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செயலற்ற சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2.2 குறைபயன்பாட்டிலான சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 சிறைச்சாலைகள் திறந்த வேலை முகாம் மற்றும் இளைய குற்றவாளி நிலையமொன்றில் 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக பேருந்தொன்று, 03 லொறிகள், பவுசரொன்று, மோட்டார் சைக்கிளொன்று முச்சக்கர வண்டியொன்று என குறைவாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. | பாதுகாப்பு மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் ஓட்டத்திற்கான தேவைப்பாடு ஏற்படாமை, திணைக்களத்தின் பெயரில் பேணிச் செல்லாமை, எரிபொருள் பாவனை அதிகமாக இருத்தல், பவுசர் நிறுவனத்தின் நீர் பற்றாக்குறை சந்தர்ப்பங்களில் மாத்திரம் பயன்படுத்தப்படுதல் மற்றும் முச்சக்கர வண்டி | குறைபயன்பாட்டிலான சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அத்தியவசிய சந்தர்ப்பங்களில் மாத்திரம் பயன்படுத்தப்படுதல் போன்ற விடயங்கள் இதற்கான காரணங்களாக உள்ளன. | |

**3.2.3 இருப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 மார்ச் 12 ஆந் திகதி மஹர சிறைச்சாலையின் உபகரண களஞ்சியத்தில் 07 பங்கீட்டுப் பொருள் உருப்படிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக இருப்பு பரிசோதனையின் போது 04 உருப்படிகளில் ரூபா 4,158.78 ஆன உபகரணங்களும் 03 இருப்பு உருப்படிகளில் ரூபா 9,942.90 ஆன மிகையும் காணப்பட்டன. | கருத்து தெரிவிக்கவில்லை. | இருப்ப தொடர்பாக பற்றாக்குறை மற்றும் விலகல் ஏதேனும் இருந்தால் நிதிப் பிரமாணம் 757(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) உணவுப் பொருள் வழங்கல் சேவை உடன்படிக்கையின் பிரகாரம் 14,175 கிலோ கிராம் வெள்ளை நாடு அரிசியில் 8,950 கிலோ கிராம் அரிசி குறைந்த தரத்திலான அரிசி வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | நிதிப் பிரமாணம் 128(1)(ஒ) பிரகாரம் அரசின் செயற்பாடு களை மேற்கொள்ளும் போது செலவிடப்படும் அரசின் பணத்திற்கு ஆகக்கூடிய பெறுமதி கிடைக்கும் வகையில் சிக்கனமாக செயற்பட வேண்டும். |

**3.3 நட்டங்களும் இழப்புகளும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 ஆண்டுகளுக்கு மேலாக காணப்படும் 1 ஆண்டிற்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரியதாக 228 வாகன விபத்துக்கள் உட்பட 252 சேத நட்ட சம்பவங்களுக்குரியதாக ரூபா 57,835,664 ஆன நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | இது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் முறையாக நிறைவேற்று வதற்காக வாகன விபத்துக் குழுவொன்று தற்போது நியமிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் நட்டங்களை பதிவழித்தல் | வாகன விபத்துக்கள் உட்பட நட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| | தொடர்பாக நிதிப் பிரமாணம் 103(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | |

**3.4 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 05 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2021 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பதில் அளிக்கப்படாமல் இருந்தது. | நாடு பூராகவும் வியாபித்துள்ள சிறைச்சாலைகளிலிருந்து பதில் கோரப்பட்டு பதில் வழங்கப்பட வேண்டியுள்ளதால் சில கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய திகதியில் பதிலளிக்க முடியாமல் இருந்ததாக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(உ) ஆம் பிரிவு மற்றும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரால் தமக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் மற்றும் விசாரணைகள் தொடர்பாக தாமதமின்றி செயற்பட்டு அவற்றிற்கு முழுமையான பதில் வழங்குதல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம் மற்றும் நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை | அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தாமதமானதால் அந்த அறிக்கையின் பிரதிகள் 2020 ஆம் ஆண்டில் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. | கணக்காய்வுச் சட்டம் மற்றும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அதிபதிக்கும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 5. கணக்காய்வு மற்றும் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 சனவரி 12 ஆந் திகதிய டீஎம்ஏ/01-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 1.3 பந்திக்கு முரணாக மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு முகாமைத்துவக் ஒரு குழுக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | முதல் காலாண்டு 02 இற்காக பிரதான உள்ளக கணக்காய்வாளர் சேவை புரியாமல் இருந்ததுடன் தொற்று நிலைமை காலத்தில் கூட்டங்களை நடாத்துவது வரையறுக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| செயற்திறனான சேவை மட்டமொன்றை நடாத்திச் செல்வற்கும் ஊழியர் தொடர்பாக காலரீதியாக மீளாய்வு செய்யாமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் நிறைவேற்று மட்டத்தில் 84 வெற்றிடங்களும் மூன்றாம் மட்டத்தில் 36 வெற்றிடங்களும் இரண்டாம் மட்டத்தில் 2,147 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தில் 96 வெற்றிடங்கள் உட்பட மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 2,363 ஆக இருந்தன. இவ்வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ஒட்டுமொத்த சிறைச்சாலைகளில் ஒட்டு மொத்த செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளிப்பதாக அவதானிக்கப்பட்டது. | வெற்றிட நிலைமை தொடர்பாக கணக்காய்வினால் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். எனினும் தற்போது காணப்படும் வெற்றிட நிலைமையின் கீழும் முடியுமான வகையில் செயற்திறனாக நிறைவேற்றுவதற்காக உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுப்பதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக புதிததாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கைகளை திட்டமிட்டுள்ளதாகவும் கணக்காய்விற்கு அறிய தருகின்றேன். | செயற்திறனாக சேவை மட்டமொன்றை பேணிச் செல்வதற்காக காலரீதியான மீளாய்வொன்றை மேற்கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |